சென்னை
செவ்வாய்
செப்டம்பர் 2,
2025
மாணவர் பதிப்பு

# தினமலர்

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
www.dinamalar.com

விலை
ரூ.3/-

# புதுமை



மைக்ரோவேவ்
ஓவன் எப்படி
கண்டுபிடிக்கப்பட்டது
என்பதைத் தெரிந்துகொள்ள
பக்கம் 3க்கு வாங்க

## பட்டம்

04 • துலீப் சிங் என்னவானார்?
05 • பெருஞ்சிறப்புப் பெற்ற சிறுவன்
06 • பயணப் புகைப்படங்கள் & நியூரோ மார்க்கெட்டிங்
07 • சுருங்கி வரும் புதன் கிரகம்!
08 • கொலைச் சிந்து & குழுவில் வழு
09 • ஐஸ் படிவங்களில் சாகசம்!

## நாடு முழுவதும் கன மழைக்கு வாய்ப்பு



கடந்த ஆண்டுகளில் செப்டம்பர் மாதங்களில் பெய்த மழையை விட இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நாடு முழுவதும் அதிக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மாதம் உத்தராகண்ட், வடக்கு ராஜஸ்தான், தெற்கு ஹரியாணா, டில்லி, வடக்கு சத்தீஸ்கர் ஆகிய பகுதிகளில் கன மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன மழை, மேக வெடிப்பால் வெள்ளம், மண் சரிவு, நிலச்சரிவு ஆகியவை ஏற்படும் என்பதால் அரசாங்கத்திடம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆய்வு மையம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தொண்டு நிறுவனத்துக்கு விருது



நோபல் பரிசுக்கு இணையாகக் கருதப்படும் ரமோன் மகசேசே விருது, சமூக சேவை, பத்திரிகை உள்ளிட்ட துறைகளில் சாதிப்பவர்களுக்குத் தரப்படுவது. 2025ஆம் ஆண்டிற்கான ரமோன் மகசேசே விருது 'எஜுகேட் கேர்ள்ஸ்' (Educate Girls) என்ற தொண்டு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2007ஆம் ஆண்டு சஃபீனா ஹுசைன் என்பவரால் ராஜஸ்தானில் தொடங்கப்பட்டது. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்ட 20 லட்சம் இந்தியப் பெண்கள் கல்வி பெற உதவியுள்ளது. ரமோன் மகசேசே விருது பெறும் முதல் இந்தியத் தொண்டு நிறுவனம் என்ற பெருமையை இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

## திறமையாளர்களின் தரவுகளைச் சேமிக்கும் தளம்

நாட்டின் மிகச் சவலான தேர்வுகளில் ஒன்று யுபிஎஸ்சி. தங்கள் ஆற்றலையும், நேரத்தையும் செலவிட்டு இந்தத் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் பலர் இறுதிக் கட்டத்தில் வெற்றிவாய்ப்பைத் தவறவிடுகின்றனர். இதனால் மீண்டும் இந்தத் தேர்வை எதிர்கொள்ள மறுபடியும் முதலில் இருந்து படிக்க வேண்டியுள்ளது. இத்தகைய திறமைமிக்க மாணவர்களின் தகவல்களைச் சேமித்து வைக்க 'பிரதிபா சேது' எனும் டிஜிட்டல் தளத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. பிரதமர் மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் இதை அறிமுகம் செய்தார். அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர இந்தத் தளம் உதவும்.




## தமிழ் மீடியம் அறிமுகம்




தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனம் (NIOS) தற்போது மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 11 மொழிகளில், 44 பாடங்களைக் கற்றுத் தருகிறது. இந்த ஆண்டு தமிழகம், புதுச்சேரியில் 10, பிளஸ் 2 வகுப்புத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 11,000 ஆக உயர்ந்துள்ளது. இதனால், இன்னும் அதிகமான கிராமப் புற மாணவர்களை ஈர்க்கும் நோக்கில் தேசியத் திறந்தநிலை பள்ளி நிறுவனம் மேல்நிலைக் கல்விக்கான பாடங்களைத் தமிழில் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்ட மாணவர்கள் பயனடைவர்.

## Skill training to 12,000 vocational stream students

Tamil Nadu's School Education Department will be imparting skill training to 12,000 vocational stream students of government higher secondary schools. The training will be offered through Industrial Training Institutes (ITIs) and State Skill Centres. The selected students will be trained in current and emerging fields such as Digital Marketing, Artificial Intelligence, and Robotics," he said, adding similarly the skill training will also be given in the emerging areas such as Solar Technician (Electrical), Additive Manufacturing (3D Printing), Aeronautical Structure and Equipment Fitter.




தினமலர் அலுவலக நேரம்: காலை 9:30 – மாலை 6:00 மணி
★ 58B, கண்ணப்பன் தெரு, சின்ன காஞ்சிபுரம்–631 501 044 - 2723 4224
★ பிளாட் எண் 66, 2வது குறுக்குத்தெரு, அய்யனார் அவென்யூ, திருவள்ளூர்–602 001 044 - 2766 3129

DINAMALAR-National Tamil Daily e-mail: dmrcni@dinamalar.in
Edited, Printed and Published by Dr.K.Ramasubbu, on behalf of Dinamalar at New Standard Press, T.V.R. House, Medavakkam, Chennai - 600 100
Administrative Office: 39, Whites Road, Chennai-600 014.
Advt e-mail: dmrae@dinamalar.in Ph 044 - 2854 0001 - 03
Joint Managing Editor Dr.R.Lakshmipathy RNI No.33618/79

பட்டம்
பொறுப்பாசிரியர்: ஆர்.வெங்கடேஷ். ஆசிரியர் குழு: ரமேஷ் வைத்யா, இ.எஸ்.லலிதாமதி, ம.பா.காந்திரமான், எஸ்.மைதிலி, பா.வெங்கடேஷ், எஸ்.நித்தியானந்தம்.
வடிவமைப்பு: பா.ஸ்டீபன், த.கார்த்திகேயன். ஓவியங்கள்: ஈ.பிரகாஷ்.
முகவரி : பட்டம், தினமலர், 69, திரு.வி.க. ஹைரோடு, ராயப்பேட்டை, சென்னை– 600 014.
மின்னஞ்சல் : pattam@dinamalar.in தொலைபேசி : 98410 53881.

திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளிகளுக்கு மொத்தமாக வரவழைக்க, சந்தா விவரங்களுக்கு
சென்னை : 98843 91342 | 99443 09681 | 97511 36644


# சர்க்யூட் பிரேக்கர்கள் என்ன செய்கின்றன?

நம் வீடுகளில் மின் விளக்குகள், மின் விசிறிகள், குளிர்சாதனக் கருவிகள், நீர் இறைப்பான்கள் போன்றவை உள்ளன. இவை அனைத்தும் மின்சாரத்தால் இயங்குகின்றன.

மின்கம்பிகள் (*wires*) வழியாக மின்சாரம் இந்தச் சாதனங்களில் பாய்கிறது.

ஆனால், சில நேரங்களில் கூடுதல் மின்சாரம் பாயும்போது, மின்கம்பிகள் ஒன்றோடொன்று உரசி ஷார்ட் சர்க்யூட் (*short circuit*) ஏற்பட்டு அசம்பாவிதங்கள் நடக்கலாம். பழைய மின் அமைப்புகளில் இதனால் தீப்பற்றவும் வாய்ப்பு இருந்தது.

### உருகிழைகள் (Fuse)



இதுபோன்ற அபாயங்களைத் தவிர்க்க, முன்பு மின்சாரம் நுழையும் இடங்களில் உருகிழைகள் (*fuse*) பயன்படுத்தப்பட்டன. அவை நம்பகமானவை என்றாலும், ஒவ்வொரு மின்பழுதுக்குப் பிறகும் உருகிழையை மாற்ற வேண்டியது ஒரு சிரமமாக இருந்தது.


### சுற்றுப் பிரிப்பான்கள் (Circuit Breakers)




அதைத் தீர்க்கவே இப்போது சுற்றுப் பிரிப்பான்கள் (*circuit breakers*) வந்துள்ளன.

- மின்கம்பிகளில் அதிக மின்சாரம் பாய்கையில், இவைகளுள் உள்ள ஈருலோகப் பட்டை (*bimetallic strip*) வெப்பம் பெற்று, மின்சுற்றைத் தானாகவே 'டப்' என்ற ஒலியோடு முறித்து விடுகிறது.
- எந்த மின்சுற்றில் பழுது ஏற்பட்டது என்பதைக் கண்ணால் பார்த்தாலேயே தெரிந்துவிடும்.
- பழுதுக்குப் பிறகு மீண்டும் பயன்படுத்துவதும் எளிது. உள்ளிருக்கும் ஸ்விட்ச் போன்ற அமைப்பை மேலே தள்ளினால் போதும்.

### எங்கெல்லாம் பயன்படுகிறது?




- மின் விளக்குகள், மின் விசிறிகள் போன்ற குறைந்த மின்சாரம் பயன்படுத்தும் சாதனங்களில் — குறைந்த அளவீடு கொண்ட சுற்றுப் பிரிப்பான்கள்.



- குளிர்சாதனங்கள், நீர் இறைப்பான்கள் போன்ற அதிக மின்சாரம் ஈர்க்கும் சாதனங்களில் — அதிக அளவீடு கொண்ட சுற்றுப் பிரிப்பான்கள்.
- வீடுகள் மட்டுமன்றி, மின்பகிர்மான நிலையங்களிலும் பயன்படுகின்றன. அங்கு பெரிய அளவிலான சுற்றுப் பிரிப்பான்கள் பயன்படுகின்றன.





சுற்றுப் பிரிப்பானில் இருக்கும் ஈருலோகப் பட்டை

சுற்றுப் பிரிப்பான்கள் வீடுகளையும் மின் அமைப்புகளையும் பாதுகாப்பானதாக ஆக்குகின்றன. மின்சாரத்தில் பெரிய அனுபவம் இல்லாதவர்களுக்குக் கூட, அவற்றை பாதுகாப்பாக அணைக்கவோ, பழுதுக்குப் பின் மீண்டும் இயக்கவோ முடிகிறது.

– சேப்பியன் குழுவினர்

# எதேச்சையான கண்டுபிடிப்பு!

அறிவியலில், ஒரு குறிக்கோளோடு தேடப்பட்டு தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் சில நேரங்களில், எதேச்சையாக ஏற்பட்ட கண்டுபிடிப்புகளும் உலகையே மாற்றிவிடுகின்றன.

அப்படித்தான் ஒரு சாக்லேட், ஒரு புதிய சமையல் சாதனத்தை உருவாக்க வழிவகுத்தது!

### அது என்ன சாதனம்?

1945ஆம் ஆண்டு, இரண்டாம் உலகப் போரின் போது, அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் மாநிலத்தில் உள்ள ரேதியான் (*Raytheon*) ஆய்வகத்தில், போருக்கான தொலை உணர்வு கருவிகள் சோதிக்கப்பட்டு வந்தன.

அங்கு பயன்படுத்தப்பட்ட முக்கிய அமைப்புகளில் ஒன்று மேக்னெட்ரான் (*Magnetron*). இது நுண்ணலைகளை (*Microwaves*) உண்டாக்கும் கருவி.

அந்த நேரத்தில் ஆய்வாளர் பெர்சி எல். ஸ்பென்சர் (*Percy L. Spencer*), தவறுதலாகக் கருவிக்கு அருகே சென்றார். சென்றவுடன், அவரது சட்டைப்பையில் இருந்த சாக்லேட் உருகியதைக் கவனித்தார்.



பெர்சி எல்.ஸ்பென்சர்

ஆர்வம் கொண்ட ஸ்பென்சர், மேலும் சாக்லேட், சோள விதைகளைக் கருவி அருகே எடுத்துச் சென்றார்.

சாக்லேட் மீண்டும் உருகியது.

சோள விதைகள் பாப்கார்ன்களாக மாறின!

முட்டையின் மீது நுண்ணலைகளைச் செலுத்த, அது வெடித்து வெந்துவிட்டது.

அப்போது தான், நுண்ணலைகளால் உணவை வெப்பமூட்டலாம் என்பது தெரியவந்தது.


இரண்டு ஆண்டுகள் கழித்து, 1947இல், உலகின் முதல் நுண்ணலை அடுப்பு (*Microwave Oven*) தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது. பின்னர் மேம்பாடுகள் செய்யப்பட்டு, இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது.

ஒரே ஒரு சாக்லேட் உருகிய சம்பவமே, நுண்ணலை அடுப்பு கண்டுபிடிக்கக் காரணமாக அமைந்தது!

### உங்களுக்குத் தெரியுமா?

*நுண்ணலைகள் உணவில் உள்ள நீர் மூலக்கூறுகளைத் தாக்கும் போது, அவை வேகமாக அதிரத் தொடங்குகின்றன. இந்த அதிவேக அதிர்வு, வெப்பமாக மாறி சுற்றியுள்ள உணவுக்குப் பரவி, உணவைச் சமைக்க உதவுகிறது.*

*நுண்ணலை அடுப்புகளில், இந்த நுண்ணலைகள் உணவின் எல்லாப் பகுதிகளிலும் சீராகப் பரவுவதற்குச் சுழலும் தட்டு பொருத்தப்பட்டிருக்கும். இதன் மூலம், பிற சமைக்கும் முறைகளைக் காட்டிலும் குறைந்த ஆற்றல் செலவில், வேகமாக உணவைச் சமைக்க முடிகிறது!*



நுண்ணலை அடுப்பு

# அரியணையில் இருந்து அந்நிய தேசத்திற்கு

என் பெயர் துலீப் சிங் (*Duleep Singh*). நான் பஞ்சாபின் கடைசி மகாராஜா. என் தந்தை, மன்னர் ரஞ்சித் சிங். சிங்கம் போல் பஞ்சாப்பை ஆட்சி செய்தார். ஆனால், அவரது மறைவுக்குப் பிறகு, என் வாழ்க்கை தலைகீழாக மாறியது.

நான் பிறந்தபோது (6.09.1838), என் தந்தையின் வீரத்தையும், என் தாயின் பாசத்தையும் மட்டுமே கண்டேன். ஆனால், என் தந்தையின் மறைவுக்குப் பிறகு, அரசியல் குழப்பங்கள் சூழ்ந்துகொண்டன. எனக்கு ஐந்து வயது இருக்கும்போது, நான் அரச பதவியில் அமர்த்தப்பட்டேன். சிம்மாசனத்தில் ஒரு குழந்தை அமர்ந்திருப்பது, ஆங்கிலேயர்களுக்கு ஒரு வாய்ப்பாகத் தெரிந்தது. என் தாயும், சில மந்திரிகளும் பெயரளவுக்குத்தான் ஆட்சி செய்தனர்.

ஆங்கிலேயர்கள் என் நாட்டைப் பறிக்கத் திட்டமிட்டனர். எங்களுக்கும் அவர்களுக்கும் இரண்டு கடுமையான போர்கள் நடந்தன.


துலீப் சிங்

நான் ஒரு குழந்தையாக இருந்ததால், அந்தப் போர்களின் கொடுமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், போரில் நாங்கள் தோற்றுவிட்டோம் என்பதை மட்டும் உணர்ந்தேன்.

1849ஆம் ஆண்டு, என் வாழ்க்கை முற்றிலும் மாறியது. ஆங்கிலேயர்கள் என் நாட்டை முழுமையாகக் கைப்பற்றினர். அவர்கள் என்னை நாடு கடத்த முடிவு செய்தனர். நான் இந்தியாவில் இருந்தால், மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படலாம் என்று அவர்கள் பயந்தனர். என் அரசவைப் பொருட்கள் அனைத்தையும் அவர்கள் எடுத்துக்கொண்டனர். அந்தச் செல்வங்களில், எங்களின் மிக மதிப்புமிக்க கோஹினூர் வைரமும் அடக்கம். அந்த வைரத்தை, ராணி விக்டோரியாவுக்குப் பரிசாகக் கொடுத்தனர்.

என்னை இங்கிலாந்திற்கு அனுப்பி, ராணி விக்டோரியாவின் பாதுகாப்பில் வளர்த்தனர். அங்கு, நான் சீக்கிய மதத்திலிருந்து, கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டேன். எனது சொந்த அடையாளம், மொழி, கலாசாரம் என அனைத்தும் என்னிடமிருந்து பிரிக்கப்பட்டன. ஆனாலும், என்னுள் இருந்த பஞ்சாபிய ரத்தம் என்னை அமைதியாக இருக்கவிடவில்லை. நான் மீண்டும் சீக்கியனாக மாறினேன், இந்தியா வருவதற்கு முயன்றேன்.


என் போராட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. நான் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்ததால், இங்கிலாந்திலிருந்து பிரான்சுக்கு நாடுகடத்தப்பட்டேன்.

1893 (22. 10. 1893)ஆம் ஆண்டு, பாரிஸ் நகரில் என் 55வது வயதில் உயிர்நீத்தேன். என் உடல் இங்கிலாந்தில் உள்ள எல்வெடான் என்ற இடத்தில் புதைக்கப்பட்டது. நான் பஞ்சாப்பில் இளவரசனாகப் பிறந்தேன். ஆனால் எனக்கு விருப்பம் இல்லாத ஒரு தேசத்தில் வளர்ந்து மறைந்தது, ஒருவரின் மரணத்திற்குப் பின்னும் வலியைத் தரக் கூடியது.



## கோகினூர் வைரம்

**கோ**கினூர் வைரம், கோல்கண்டா [தற்போது தெலங்கானாவில் உள்ளது] சுரங்கத்தில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டது. அது பல்வேறு கரங்களுக்கு மாறி, பஞ்சாப்பின் ரஞ்சித் சிங்கிடம் இருந்தது. அவரின் மறைவுக்குப் பிறகு மகனான துலீப் சிங்கிடம் சென்றது. நாட்டை ஆங்கிலேய அரசு கைப்பற்றிக்கொண்டப் பிறகு, வைரத்தையும் அவர்கள் எடுத்துக் கொண்டனர்.


ஆங்கிலேயர் சூழ, இளவரசன் துலீப்

## துயர சரித்திரத்தின் பெருமை மிக்க வாரிசு

**து**லீப் சிங்கிற்கு மூன்று மகன்கள். மூன்று மகள்கள். அதில் சோபியா துலீப் சிங்தான் (*Sophia*), தனது போராட்டங்களுக்காக அறியப்படுகிறார். இங்கிலாந்தில் பெண்கள் வாக்குரிமை பெறுவதற்காகப் பாடுபட்டவர்களின் பட்டியலில், சோபியா முதன்மையானவராகத் திகழ்கிறார். தன் சகோதரி இளவரசி பம்பாவுடன் 1907, 1924 என இரண்டு முறை இந்தியாவுக்குப் பயணம் செய்தார். முதல் முறை அவர்கள் லாகூர், அமிர்தசரஸில் உள்ள தங்கள் குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றனர். இரண்டாவது முறை காஷ்மீர், லாகூர், அமிர்தசரஸுக்குச் சென்றனர்.

லாகூரில், இளவரசிகள் சேலை, பாரம்பரிய நகைகள் அணிந்து வந்ததைக் கண்ட மக்கள் உற்சாகமடைந்தனர். அவர்கள் 'மகாராஜா துலீப் சிங்கின் இளவரசிகள் வந்துவிட்டார்கள். நாங்கள் உங்களுடன் இருக்கிறோம், உங்களுக்கு உலகையே கொடுப்போம்!' என்று கோஷமிட்டனர். ஆங்கிலேய காவல்துறையினர், கூட்டத்தைக் கலைத்தனர்.


சோபியா (வலது) தன் சகோதரிகளுடன்.

இளவரசி சோபியா தன் வாழ்நாள் முழுவதும் இந்தியர்களுக்கும், பெண்களுக்கும் ஆதரவாக நின்றார். அவர் லண்டனில் உள்ள சீக்கியர் கோயிலுக்குத் தொடர்ந்து சென்று, சீக்கிய சமூகத்தினருடன் நெருங்கிய உறவைப் பேணினார். லண்டனில் சிக்கித் தவித்த இந்தியர்களுக்கு ஆதரவாக நின்றார்.

1911இல், நாய்கள், வண்டியை உரிமம் இல்லாமல் வைத்திருந்ததற்காக, சோபியாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இதற்கு சோபியா, ''இங்கிலாந்தில் உள்ள பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டு, என்னை ஒரு குடிமகளாக அரசு அங்கீகரிக்கும்போது, வண்டிக்கான உரிமைத் தொகையை செலுத்துவேன்.'' என்றார்.

இதனால் அவரின் நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்தில் விடப்பட்டன. மீண்டும் இதே காரணத்திற்காக அவர் அபராதம் செலுத்த மறுத்தபோது, அவரின் வைர மோதிரம் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த மோதிரத்தை ஜோப்லிங் ரோவ் என்பவர் ஏலத்தில் வாங்கி, இளவரசி சோபியாவிடம் மீண்டும் ஒப்படைத்தார். அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் பலத்த கரவொலி எழுப்பினர். முதல் உலகப் போரின்போது, இந்திய வீரர்களுக்கு மருத்துவம் உள்ளிட்ட உதவிகள் செய்தார்.

இளவரசி சோபியா, 1948 ஆகஸ்ட் 22 அன்று உறக்கத்திலேயே இறந்தார். அவரின் வேண்டுகோளின்படி, உடல் தகனம் செய்யப்பட்டு, சாம்பல் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

# பெருஞ்சிறப்புப் பெற்ற சிறுவன்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யா பூஷணம், மகாவித்துவான், டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இல்லையா?

சரி, 'தமிழ்த் தாத்தா' என்ற பெயரை நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். உ.வே.சாமிநாதையரின் பட்டங்கள்தான் அவை.

.....

**சா**மிநாதன் குழந்தையாக இருந்தபோது, 'சாமா', 'சாமா' என்றே வீட்டிலுள்ளவர்கள் அழைப்பார்கள். சாமாவிடம் அப்போது வேடிக்கையான ஒரு பழக்கம் இருந்தது. காலையில் எழுந்தவுடனே அவருக்குப் பசி வந்து விடும். உடனே ஏதாவது உணவு கொடுத்தாக வேண்டும். இந்தக் காலமாக இருந்தால், கடையிலே ரொட்டியை வாங்கி வந்து தயாராக வைத்திருக்கலாம்; காலையில் எழுந்தவுடன் கொடுக்கலாம். ஆனால், நூறு ஆண்டுகளுக்கு முன்பு ரொட்டிக்கு எங்கே போவது? அதையெல்லாம் அப்போது இருந்தவர்கள் பார்த்ததுகூட இல்லை. ஆனாலும், சாமாவுக்கு ஏதாவது கொடுத்தாக வேண்டுமே... குழந்தையின் மனம் நோக அம்மா விடுவார்களா?


கோழி கூவும்போதே எழுந்து பிள்ளைக்காக அப்பம் தயார் செய்யத் தொடங்கிவிடுவார்கள். அந்த அப்பத்திற்குக் 'கரண்டி அப்பம்' என்று பெயர். அந்த அப்பத்தைச் சாமா படுத்திருக்கும் இடத்திற்குப் பக்கத்திலே ஓர் இலையின் மேல் வைப்பார்கள். மேலே ஒரு பாத்திரத்தைப் போட்டு மூடிவிடுவார்கள். சாமா எழுந்ததும், அந்தப் பாத்திரத்தை ஒரு தட்டுத் தட்டுவாராம். உடனே, உள்ளேயிருக்கும் கரண்டி அப்பம் காட்சி தருமாம். அதை எடுத்து ஆசையாகத் தின்பாராம். கரண்டி அப்பம் சாப்பிட்டுச் சிறிது நேரம் சென்ற பிறகு, பழைய சோறு சாப்பிடுவாராம்.

.....

**சா**மாவின் தந்தையார் ஊர் ஊராகச் சென்று கதைப் பிரசங்கம் செய்து வருவார். அவருடைய இராமாயணப் பிரசங்கம் மிக மிக நன்றாக இருக்குமாம். அதனால், பல ஊர்களிலிருந்து அவருக்கு அடிக்கடி அழைப்பு வருமாம். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் மிகவும் அழகாக, கணீரென்று பாடுவாராம். பக்தி ததும்பும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு, எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்களாம். தம்முடைய பிள்ளையும் நன்றாகச் சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். அந்தக் காலத்தில் சங்கீத வித்துவான்களுக்குத் தெலுங்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. அதனால், சங்கீதம் பயிலுவதற்குத் தெலுங்கு அவசியம் என்று தந்தையார் நினைத்தார். சாமாவை ஒரு பள்ளியில் சேர்த்தார். அந்தப் பள்ளியில் தெலுங்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. சாமாவுக்குத் தெலுங்கு ஏறவில்லை. ஆனாலும், சங்கீதம், தமிழ் இரண்டையும் நன்றாகக் கற்று வந்தார்.

பிள்ளைக்குத் தெலுங்கில் அக்கறை இல்லை என்பது தந்தைக்குத் தெரிந்தது. உடனே, அவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. "எந்த வேலைக்கும் நீ பயன்படமாட்டாய். சமையல் வேலைக்குக்கூடத் தகுதியில்லாதவன்" என்று திட்டினார். அத்துடன் பள்ளிக்கு மகனை அனுப்புவதையும் நிறுத்திவிட்டார்.

ஆனாலும், சாமா சங்கீத ஆசையை விடவில்லை. யாரேனும் அழகாகப் பாடினால், ஆவலோடு கேட்டுக் கொண்டே இருப்பார். அப்படியே திருப்பிப் பாடியும் காட்டுவார்.



ஒரு சமயம், உறவினர் ஒருவர் வீட்டில் ஒரு விசேஷ நிகழ்ச்சி நடந்தது. சாமாவும் அவருடைய தந்தையும் அங்கே சென்றிருந்தார்கள். அப்போது ஒரு சங்கீத வித்துவான் நந்தனார் சரித்திரத்திலிருந்து சில கீர்த்தனங்களைப் பாடினார். கோபாலகிருஷ்ண பாரதியார் எழுதிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனங்களை அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் பாடுவார்கள். அன்று அந்த வித்துவான் பாடிய கீர்த்தனங்களில் ஒன்று சாமாவுக்கு மிகவும் பிடித்தது.

தீயினில் மூழ்கினார் திருநாளைப் போவார்

தீயினில் மூழ்கினார்

என்ற கீர்த்தனம்தான் அது. அதை நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டார்.

கச்சேரி முடிந்த பிறகு, சாமா அதே கீர்த்தனத்தை அங்கு வந்திருந்த உறவினர்களிடம் பாடிக் காட்டினார். ஆனால், அப்போது அவருடைய தந்தை அங்கே இல்லை. எங்கோ வெளியில் சென்றிருந்தார்.

சாமாவின் பாட்டைக் கேட்டவர்கள், "ஆஹா! மிகவும் நன்றாக இருக்கிறது. இன்னொரு தடவை பாடு. இன்னொரு தடவை பாடு" என்று மீண்டும் மீண்டும் பாடச் சொல்லிக் கேட்டார்கள். சாமா உற்சாகமாகப் பாடிக்கொண்டேயிருந்தார். அந்தச் சமயம் பார்த்து, வெளியில் சென்றிருந்த தந்தை திரும்பி வந்தார். வந்தவர், 'யாரது இவ்வளவு இனிமையாகப் பாடுவது?' என்று நினைத்துக் கொண்டே உள்ளே எட்டிப் பார்த்தார். பார்த்தவர், 'அடடே, நம் சாமாவா' என்று வியப்படைந்தார்.

சிறிது நேரம் மறைந்திருந்தபடியே பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு, சாமாவின் எதிரிலே வந்தார். தந்தையைக் கண்டதும் பிள்ளையின் பாட்டு நின்றுவிட்டது. ஆனால், தந்தையோ, "ஏன் நிறுத்தி விட்டாய்? பயப்படாமல் பாடு. உனக்கும் நன்றாகச் சங்கீதம் வரும்போல் தெரிகிறது" என்றார். "நான் தான் அவசரப்பட்டு உன்னை எதற்கும் பயன்பட மாட்டாய் என்று வைதுவிட்டேன்" என்று சொன்னார்.

அந்தச் சொற்கள் பிள்ளையின் மனத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு பதிந்தன. இசையோடு தமிழும் கற்று, 'தமிழ்த் தாத்தா' என்கிற பெரும் சிறப்பைப் பின்னாளில் பெற்றது அந்தப் பிள்ளை!

அழ. வள்ளியப்பா எழுதிய 'பெரியோர் வாழ்விலே' என்கிற நூலிலே இந்தக் கதையும், இதைப்போன்ற பிற பிரமுகர்களைப் பற்றிய கதைகளும் இடம்பெற்றுள்ளன.

# பயணங்களை நினைவுகூரும் புகைப்படங்கள்!

**புகைப்படக்கலை 13**

பயணங்களின்போது வழியில் தென்படும் நிலப்பரப்பு, அங்கு வசிக்கும் மக்கள், அவர்களது கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், உணவுகள், உணர்வுகள், வரலாறு போன்றவற்றை ஆவணப்படுத்தும் விதமாக அமைவதே, பயணப் புகைப்படக் கலை.

### பயன்கள் என்ன?

இந்தப் புகைப்படங்கள், சுற்றுலாவுக்கு இதர பயணிகளை ஈர்க்கின்றன. சுற்றுலா தொடர்பான நிறுவனங்கள், தங்களது சேவைகளை விளம்பரப்படுத்தப் பயனாகின்றன. பத்திரிகைகள், புத்தகங்கள், இணைய வெளியீடுகளில் பயன்படுகின்றன.

இதன்மூலம், பல்வேறு பகுதிகளின் செய்திகளை ஆவணப்படுத்த முடிகிறது. சமூக அவலங்களை வெளிக்கொண்டு வரவும் உதவுகிறது. கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப் பயனாகிறது.

### வரலாறு

1800ஆம் ஆண்டுகளில், பயணப் புகைப்படக்கலை தோன்றியது. புதிய நாடுகளைக் கண்டுபிடித்து அவற்றை ஆவணப்படுத்தவும், காலனி ஆதிக்கத்தை நிலைநாட்டும் படையெடுப்பின்போதும், தொல்பொருள் ஆராய்ச்சிகளின்போதும், பயணப் புகைப்படக் கலை வேகமாக வளர்ந்தது.

இதன் பொற்காலம், 1880 – 1920களில் தான். அப்போதுதான், ஹாஃப்டோன் பிரின்டிங் (Halftone Printing) எனும் அச்சுமுறை உருவானது. அதன்மூலம், புத்தகங்கள், பத்திரிகைகளில் பயணப் புகைப்படங்கள் அச்சிடப்பட்டு, பலரைச் சென்று சேர்ந்தன.



இதனால், தூர தேசங்களை அறியும் ஆவல், மக்களுக்கு அதிகரித்தது. அதன் விளைவாக, மேன்மேலும் பயணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. 1940 – 1970களில், 35 மி.மீ. புகைப்படச் சுருள் அறிமுகமானது; பயணப் புகைப்படக் கலையும் எளிதானது.

நேஷனல் ஜியாகிரஃபி (National Geography) போன்ற இதழ்கள் மூலம், பயணப் புகைப்படங்கள் பிரமிப்பை அளிக்கும் வகையில் மக்களுக்குக் கிடைத்தன.

தற்போதைய டிஜிட்டல் உலகில், ஸ்மார்ட்ஃபோன்கள் மூலம் உடனடியாகப் படங்களை எடுக்கவும் சீரமைக்கவும் முடிகிறது. ஊடகங்கள் மூலம், பயணப் புகைப்படங்கள் உலகம் முழுவதும் பகிரப்படுகின்றன.

### கவனிக்க வேண்டியவை

- பயண புகைப்படக் கலையின் அடிப்படை அம்சங்களை நன்கு அறிந்திருப்பது, புகைப்படக் கலைஞருக்கு இன்றியமையாதது.
- படமெடுக்கும் பகுதி மக்களுடைய பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள் ஆகியவற்றை அறிந்து படமாக்க வேண்டும்.
- தனி மனிதரையோ, குழுவையோ படமாக்குவதற்கு முன்பு, அவர்களின் அனுமதி பெறுவது முக்கியம்.
- புனிதத் தலங்கள் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்தவற்றைப் படமாக்கும்போது, கூடுதல் கவனம் தேவை.
- கூட்டமான மற்றும் அறிமுகம் இல்லாத பகுதிகளில் படமாக்கும்போது, விழிப்புடன் இருக்க வேண்டும்.
- பதற்றத்தை உருவாக்கும் இடங்கள், எல்லைப் பகுதிகள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

இத்தகைய புகைப்படங்களைக் கொண்டு, சுற்றுலா நிறுவனங்கள், பத்திரிகை, வலைத்தளம், சமூக ஊடகங்களில் வருவாய் ஈட்டலாம்.

**– ஆர்.லதா**

# மனங்களைப் படம் பிடிக்கும் நியூரோ மார்க்கெட்டிங்!



**சந்தைப்படுத்தல் 13**

நுகர்வோரின் மூளை செயல்பாடுளை அறிந்து, சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குவதே, நியூரோ மார்க்கெட்டிங் (Neuro marketing). இது, நரம்பியல் அறிவியலையும் (neuroscience), சந்தைப்படுத்தலையும் (marketing) இணைக்கும் ஓர் உத்தியாகும்.

பாரம்பரிய சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிகள் (surveys), வாடிக்கையாளர்கள் தாங்களாகவே தெரிவிக்கும் தகவல்களை (surveys, focus groups) சார்ந்துள்ளன. இதில், மக்கள் ஒரு பொருளை ஏன் வாங்குகிறார்கள் என்பது பற்றித் தெளிவாகத் தெரிவதில்லை.

நியூரோ மார்க்கெட்டிங் முறை, இந்தச் சவால்களைச் சமாளிக்க உதவுகிறது. மூளையின் செயல்பாடுகளைப் பதிவு செய்யும் கருவிகளைப் பயன்படுத்தி, நுகர்வோரின் உள்மன உணர்வுகளையும், ஆழ்மனத் தூண்டுதல்களையும் (subconscious drives) கண்டறிகிறது.

### நியூரோ மார்க்கெட்டிங்கில் பயன்படும் சில முக்கிய நுட்பங்கள்:

**1 EEG (Electro Encephalography)**

இது, மூளையின் மின் செயல்பாடுகளை அளவிடுகிறது. ஒரு விளம்பரம் அல்லது தயாரிப்பைப் பார்க்கும்போது, ஒருவரின் மூளை எவ்வளவு ஈடுபாட்டுடன், உணர்ச்சிப்பூர்வமாக செயல்படுகிறது என்பதைக் கண்டறிய உதவுகிறது.

**2 FMRI (Functional Magnetic Resonance Imaging)**

இது மூளையின் ரத்த ஓட்ட மாற்றங்களை அளவிடுகிறது. இதன்மூலம், மூளையின் எந்தப் பகுதிகள், குறிப்பிட்ட தூண்டுதலுக்குப் பதிலளிக்கின்றன என்பதைக் கண்டறிய முடியும். இது, நுகர்வோரின் விருப்பு, வெறுப்புகளையும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

**3 Biometrics Tracking**

ஒரு நுகர்வோர், விளம்பரம், வலைத்தளம் அல்லது கடைக்குள் இருக்கும்போது, எங்கு பார்க்கிறார், எவ்வளவு நேரம் பார்க்கிறார் என்பதை, அவரின் கண் அசைவுகளில் கண்டறிய உதவுகிறது. இதன்மூலம், எது அவரின் கவனத்தை ஈர்க்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

### நியூரோ மார்க்கெட்டிங்கின் பயன்கள்:

- பார்வையாளர்களின் மூளையில், விளம்பரங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்து, அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் விளம்பரங்களை உருவாக்கலாம்.
- ஒரு தயாரிப்பின் வடிவமைப்பு, நிறம், பேக்கேஜிங் ஆகியவை, நுகர்வோரின் மூளையை எப்படி ஈர்க்கிறது என்பதை அறிந்து, அதை மேம்படுத்தலாம்.
- ஒரு பிராண்ட், நுகர்வோரின் மனத்தில் எப்படி ஆழமாகப் பதிகிறது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்ப சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்கலாம்.
- ஆன்லைன் ஷாப்பிங் மற்றும் கடைகளில் பொருட்கள் வாங்கும் அனுபவத்தை மேம்படுத்துவதன் மூலம், விற்பனையை அதிகரிக்கலாம்.

**– சாய் நந்தன்**

# மலை தொடர்ச்சியின் முக்கிய கணவாய்

பாலக்காட்டுக் கணவாய் *(Palakkad Gap)* என்பது கேரள மாநிலத்தின் பாலக்காடு மாவட்டத்தையும், தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தையும் இணைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஒரு பெரிய இடைவெளியாகும்.

**அமைவிடம்**


மேற்குத் தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதியில் உள்ள நீலகிரி மலைகளுக்கும், தெற்குப் பகுதியில் உள்ள ஆனைமலைக்கும் இடையே இந்த இடைவெளி உள்ளது. இது ஏறத்தாழ 30 – 40 கிலோமீட்டர் அகலத்தில் அமைந்துள்ளது. இதுவே மேற்குத் தொடர்ச்சி மலையின் மிகத் தாழ்வான பகுதியாகும்.

**தோற்றம்**

இந்தக் கணவாய் எப்படி உருவானது என்பது குறித்து பல புவியியல் கோட்பாடுகள் உள்ளன. பண்டைய காலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாகவோ அல்லது டெக்டானிக் தகடுகளின் அசைவுகளினாலோ இந்த இடைவெளி ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. மேலும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆறுகள் ஓடியதால் ஏற்பட்ட அரிப்பு காரணமாகவும் இது உருவாகியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

**புவியியல் முக்கியத்துவம், தாக்கம்**

பாலக்காட்டுக் கணவாய், அதன் தனித்துவமான புவியியல் அமைப்பால் பல முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களைக் கொண்டுள்ளது.




**வரலாற்று முக்கியத்துவம்**

சங்க காலத்தில் இருந்தே, இந்தக் கணவாய் பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள் போன்ற அரசர்களுக்கும் வணிகர்களுக்கும் ஒரு நுழைவாயிலாகச் செயல்பட்டுள்ளது.

**காற்று ஆற்றல்**

மேற்கில் இருந்து வீசும் காற்றை இந்தக் கணவாய் குடுவை [Funnel] போல் செயல்பட்டு கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்கு வேகமாக அனுப்புகிறது. சராசரியாக மணிக்கு 18 – 22 கி.மீ. வேகத்தில் காற்று வீசுகிறது. தமிழகத்தில் மிக அதிகமாகக் காற்றாலைகள் மூலம் மின்னுற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். உடுமலைப்பேட்டை, கடத்தூர் சுற்றுப்பகுதிகளில் பெரிய காற்றாலைகளைக் காணமுடியும்.

**காலநிலை மாற்றம்**

வங்காள விரிகுடாவில் இருந்து வரும் தென்மேற்குப் பருவமழை காற்று, பொதுவாக மேற்குத் தொடர்ச்சி மலையால் தடுக்கப்படுகின்றன. ஆனால், இந்தக் கணவாய் வழியாக ஈரப்பதம் நிறைந்த காற்று தமிழ்நாட்டிற்குள் தங்குதடையின்றி நுழைகிறது. இதனால், தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்கள் மழை பெறுகின்றன. இந்தக் காரணத்தினால் கோயம்புத்தூர் பகுதி கோடை காலத்தில் தமிழகத்தின் மற்ற பகுதிகளை விட வெப்பம் குறைந்து காணப்படுகிறது. இது விவசாயத்திற்கு மிகவும் உதவியாக உள்ளது.

**பல்லுயிர்ப் பெருக்கம்**

இந்தக் கணவாய், மேற்குத் தொடர்ச்சி மலையின் இருபுறமும் உள்ள உயிரினங்களின் இடப்பெயர்ச்சிக்கு ஒரு முக்கிய வழியாக உள்ளது. யானைகள், புலிகள் போன்ற விலங்குகள் இந்த இடைவெளியைப் பயன்படுத்தி உணவு, நீர் ஆதாரங்களைத் தேடி இடம்பெயர்கின்றன. இது அந்தப் பகுதியின் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு உதவுகிறது.

**போக்குவரத்து, வர்த்தகம்**

வரலாற்று ரீதியாகவும், நவீன காலத்திலும் இந்தக் கணவாய் மிக முக்கியமான வர்த்தக, போக்குவரத்துப் பாதையாக விளங்குகிறது. இது கேரளாவின் முதன்மையான வணிக வழித்தடங்களில் ஒன்றாகும்.

**சாலை, ரயில் போக்குவரத்து**

தமிழகம், கேரளாவிற்கு இடையேயான முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளும் *(NH 544)*, ரயில் பாதைகளும் இந்தக் கணவாய் வழியாகவே செல்கின்றன. சாலை வழியாகக் கேரளத்தை அடையும் பொருட்கள் பெரும்பாலும் இந்த வழியாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன.


– சேயோன்

# சுருங்கி வரும் புதன் கிரகம்!

நமது சூரியக் குடும்பத்திலேயே மிகச்சிறிய கோள் புதன் *(Mercury)*. இந்தக் கோள் மிகவும் வெப்பமானது. ஆனால், இது கோடிக்கணக்கான ஆண்டுகளாகச் சுருங்கி வருகிறது என்று விஞ்ஞானிகள் இப்போது உறுதி செய்துள்ளனர்.

**புதன் கிரகம் ஏன் சுருங்குகிறது?**

புதன் கிரகத்தின் மையப்பகுதி, இரும்பு, உலோகங்களால் ஆனது. இது கோடிக்கணக்கான ஆண்டுகளாக மெதுவாகக் குளிர்ந்து வருகிறது. ஒரு சூடான பொருள் குளிர்ந்தால், அது சுருங்கும் அல்லவா? அதேபோல, புதனின் மையப்பகுதி குளிர்ந்து சுருங்குவதால், அதன் மேலே இருக்கும் ஓடும் சுருங்குகிறது. விஞ்ஞானிகள் புதனின் மேற்பரப்பில் உள்ள பிளவுகளை ஆய்வு செய்து இந்த உண்மையை உறுதிப்படுத்தினர். இந்தப் பிளவுகள், புதன் கிரகம் சுருங்குவதன் காரணமாக அதன் மேற்பரப்பு மடிந்து ஏற்பட்டவை.




**எவ்வளவு சுருங்கியுள்ளது?**

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, புதன் கிரகத்தின் ஆரம் *(Radius)* கிட்டத்தட்ட 2.7 முதல் 5.6 கிலோமீட்டர்கள் வரை சுருங்கியுள்ளது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இது, கடந்தகால மதிப்பீடுகளைவிட மிகவும் துல்லியமானது. புதன் கோள் தோன்றியதிலிருந்து அதன் மொத்த விட்டம் ஏறத்தாழ 11 கிலோமீட்டர்கள் சுருங்கியுள்ளது என்றும் கணக்கிட்டுள்ளனர்.

நமது பூமி போன்ற பெரிய கிரகங்களைவிட புதன் வேகமாகச் சுருங்குகிறது. இதற்குக் காரணம், புதன் சிறியதாக இருப்பதால், அதன் மையப்பகுதி மிக வேகமாக வெப்பத்தை இழந்துவிடுகிறது. பூமி பெரியதாக இருப்பதாலும், அதன் தகடு புவிப்பரப்பியலில் *(Plate Tectonics)* சுறுசுறுப்பாக இருப்பதாலும், அதன் உள் வெப்பம் மிக மெதுவாகவே குறைகிறது. அதனால் பூமி புதனைப் போல வேகமாகச் சுருங்குவதில்லை.

புதன் கிரகம் சுருங்குவதைப் பற்றிய இந்த ஆய்வு, ஒரு கிரகத்தின் உட்புற வெப்பம் எப்படி அதன் மேற்பரப்பைப் பாதிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த ஆய்வு முறைகள் செவ்வாய்க் கிரகம் போன்ற மற்ற கோள்களைப் படிக்கவும், பிரபஞ்சத்தில் உள்ள பிற கிரகங்கள் எப்படி உருவாகிப் பரிணமிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளவும் உதவும்.

– கிரி கணபதி

# முதலமைச்சர் ஆன கவிஞர்

சேக்கிழார் என்னும் புலவர் குன்றத்தூரில் வசித்துவந்தார். அப்போது, சோழ நாட்டை அரசாண்டு வந்தவன் இரண்டாம் குலோத்துங்கன். இந்த மன்னன், கல்வி கேள்விகளில் மிகவும் வல்லவன். ஒரு நாள் ஔவையார் பாடிய,

*'வேழம் உடைத்து மலைநாடு, மேதக்கச்*
*சோழ வளநாடு சோறுடைத்து பூழியர்கோன்*
*தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை*
*நன்னாடு சான்றோர் உடைத்து'*

என்னும் பாடலை வாசித்தான்.

'தொண்டை நாடு சான்றோர் உடையது' என்னும் கருத்து உண்மைதானா என்று சோதிக்க விரும்பினான்.

1. உலகைவிடப் பெரியது எது?
2. கடலைவிடப் பெரியது எது?
3. மலையைவிடப் பெரியது எது?

என்று மூன்று கேள்விகளை ஓலையில் எழுதி, தொண்டை நாட்டுக்கு அனுப்பினான்.

உடனே சேக்கிழாரை அழைத்தான் தொண்டைநாட்டுத் தலைவன்.


மூன்று திருக்குறள் பாக்களை அந்தக் கேள்விகளுக்குப் பதிலாக எழுதினார் சேக்கிழார்.

1. *காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்*
   *ஞாலத்தின் மாணப் பெரிது*
2. *பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
   *நன்மை கடலில் பெரிது*
3. *நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்*
   *மலையினும் மாணப் பெரிது.*

இவையே அந்த விடைகள். அவை மிகவும் பொருத்தமானவை என்பதால், சேக்கிழாருக்குச் சன்மானங்களை அள்ளிக்கொடுத்தான் தொண்டைநாட்டுத் தலைவன். பதில்களைச் சோழ மன்னனுக்கு அனுப்பி வைத்தான்.

அவற்றைப் பார்த்த குலோத்துங்க மன்னன், அளவில்லாத ஆனந்தம் கொண்டான். அவற்றைத் தன் சபையை அலங்கரிக்கும் புலவர்களுக்கும் படித்துக் காண்பித்தான். அங்குள்ள அறிஞர் யாவரும், "தொண்டைநாடு சான்றோருடைத்து என்பதில் சிறிதும் சந்தேகமில்லை" என்று கூறி மகிழ்ந்தனர்.

அரசன், 'இந்த நுண்ணறிவு உடையவரைத் தன்னுடைய அரசாட்சியில் மந்திரியாக அமர்த்தினால் நாடு நலம்பெறும்' என்று எண்ணி சேக்கிழாரைத் தன் நாட்டிற்கு அழைத்துவரச் செய்து முதல் மந்திரிப் பதவியைக் கொடுத்தான்.



# வித்தியாசமான நாட்டுப்புறப் பாடல்

இப்போது புலனாய்வுப் பத்திரிகைகள் வருகின்றன. குற்றச் செயல்களைப் பற்றிய தகவல்களை, பின்புலத் தகவல்களோடு விவரிக்கும் கட்டுரைகளைப் பிரசுரிக்கின்றன. முற்காலத்தில் இந்தச் செய்திகள் எப்படிப் பரவியிருக்கும்? இந்தக் கேள்விக்கான பதில்தான், 'கொலைச் சிந்து'.

இது ஒரு கதைப் பாடல் வடிவம்.

இப்பாடல்கள், குற்றச் செயலைப் பற்றிய செய்திகளோடு அவை நிகழக் காரணமாக இருந்த சமூகப் பிரச்னைகளையும் சேர்த்தே எடுத்துச் சொல்கின்றன. இதை ஒருவர் ராகம் போட்டு வாசிக்க, பிறர் கேட்பார்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் தகவல்களைத் தெரிவிக்கும் ஓர் ஊடகமாக இந்தப் பாடல் செயல்பட்டிருக்கிறது.

இதில் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் பெயர், ஊர், அந்தச் சம்பவத்துக்கான காரணம், அவரது குணநலன்கள், குற்றம் நடந்த விதம் போன்ற தகவல்கள் இடம்பெற்றிருக்கும்.

எடுத்துக்காட்டாக, 1895ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தை, 'படுகளச் சிந்து' என்கிற நூல் விவரிக்கிறது.

மாமியார், மருமகள் சண்டையின் விளைவாக ஒரு வீட்டில் நடந்த துயர நிகழ்வு அது. அதன் உள்ளடக்கம் கீழுள்ளது போன்று நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைந்திருக்கும்:

**'அக்கினியில் தள்ளுதற்கு ஆசைப்பட்டு அஞ்சிய**
**திக்கைவிட்டுப் புறப்பட்டு தெருவிலே வந்திருந்தாள்.**
**வீட்டினிலே இருந்தவளை வேணுமென்று வந்திருந்து**
**ஆற்றினிலே அவளைத் தள்ளி அடித்தான்...'**

இதுபோன்ற வரிகள், ஒரு குற்றத்தின் பின்னணியில் இருந்த மனக் கசப்புகளையும், குடும்பப் பிரச்னைகளையும் வெளிப்படுத்துகின்றன. இந்தப் பாடல்களில், கொலை நடந்த இடம், நேரம், கொலைக்குக் காரணமானவர்கள், கொல்லப்பட்டவரின் பெயர் ஆகிய விவரங்கள் மிகத் துல்லியமாகப் பதிவு செய்யப்படும்.

இதைத் தவிர வேறு சில கொலைச் சிந்து பாடல்களும் நூலாக வெளியாகி உள்ளன. அவை இப்போது கிடைப்பதில்லை. அவற்றில் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிடுவோம். சித்தையன் கொலைச்சிந்து: ஒரு மரணத்தைக் குறித்த விரிவான கதைப்பாடல்.

அரியலூர் ரயில் விபத்து (1987): இதுவும் ஒருவித 'கொலைச் சிந்து' பாடலாகவே மக்களால் படிக்கப்பட்டது, பாடப்பட்டது.

இந்தக் கதைப் பாடல்கள், அக்காலத்தில் செய்தித்தாள்கள் பரவலாக இல்லாத நிலையில், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உதவின.



## குழுவில் வழு

தமிழில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உண்டு.

அப்படிப்பட்ட சொற்களைக் கீழே தருகிறோம். ஒரு சொல் தொகுப்பில் பல சொற்கள் இருக்கும். அவற்றில் அதே பொருளைக் கொடுக்காத ஒரு சொல்லும் இடம் பெற்றிருக்கும். அந்தச் சொல்லை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

சரியா?

இதோ சொல் தொகுப்புகள்...

1. **அறைந்தான், இயம்பினான், படர்ந்தான், புகன்றான், பகர்ந்தான்**
2. **பார்த்தல், கானல், நோக்குதல், காணுதல், கண்ணுறுதல்**
3. **எழுதிவிடு, இயற்றிவிடு, யாத்துவிடு, சென்றுவிடு, வரைந்துவிடு**
4. **அமர்வாயா, செல்வாயா, இருப்பாயா, உட்கார்வாயா, குந்துவாயா**
5. **பருகு, குடி, அருந்து, உண்ணா, தாகந்தணி**

விடை: 1. படர்ந்தான் 2. கானல் 3. சென்றுவிடு 4. செல்வாயா 5. உண்ணா

விளையாட்டு

# ஸ்பீட் ஸ்கேட்டிங்: ஐஸ் படிவங்களில் சாகசம்!



சக்கரம் பொருத்திய பலகைகளைக் கால்களில் மாட்டிக்கொண்டு, வழவழப்பான பரப்பில் வேகமாக உந்தி நகரும் போட்டி, ஸ்கேட்டிங் (Skating) எனப்படும். இந்த நகரும் பரப்பு, ஐஸ் படிவங்களாக இருப்பதே, 'ஸ்பீட் ஸ்கேட்டிங்' (Speed skating) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு குளிர்கால விளையாட்டு.

### வகைகள் என்னென்ன?

**நெடும் தொலைவு ஸ்பீட் ஸ்கேட்டிங்:** 400 மீட்டர் நீளம் கொண்ட ஸ்கேட்டிங் தளம், ஓவல் வடிவ பனி வளையத்தில் அமைந்திருக்கும்.

**சிறு தொலைவு ஸ்பீட் ஸ்கேட்டிங்:** ஸ்கேட்டிங் தளத்தின் நீளம், 111.12 மீட்டர்கள். குறுகிய வளைவுகளைக் கொண்டது.

**மாரத்தான் ஸ்பீட் ஸ்கேட்டிங்:** இயற்கையான பனிப் பாளங்களில் நடக்கும். ஸ்கேட்டிங் செய்ய வேண்டிய தூரம் அதிகமாக இருக்கும்.

### பொது விதிமுறைகள்

- அனுமதிக்கப்பட்ட ஸ்கேட்டிங் பலகைகள், உடைகள், தலைக்கவசம் ஆகியவற்றை, போட்டியாளர்கள் அணிய வேண்டும்.
- ஸ்கேட்டிங் செய்வதற்கென்று உள்ள பாதையை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- உரிய நேரத்துக்கு முன் ஸ்கேட் செய்ய ஆரம்பிப்பது, தகுதி இழப்புக்கு வழிவகுக்கும்.
- போட்டியாளருக்கான நடத்தையை மீறக்கூடாது.
- இலக்கை அடைய எடுத்துக்கொள்ளும் நேரத்தைப் பொறுத்து, வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவர்.

### எப்படித் தோன்றியது?

ஸ்காண்டிநேவியா மற்றும் நெதர்லாந்து மக்கள், உறைந்துபோன ஏரிகள், ஆறுகள் ஆகியவற்றைக் கடக்க, மிருகங்களின் எலும்புகளை, ஸ்கேட்டிங் பலகையைப் போலப் பயன்படுத்தினர். காலப்போக்கில், மரக்கட்டைகளும், உலோகத் தகடுகளும் பயன்பட்டன.

இதை மையமாக வைத்து, 13ஆம் நூற்றாண்டில், நெதர்லாந்தில் முதன்முறையாக, பல்வேறு தூரங்களை இலக்குகளாக நிர்ணயித்து, ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டி உருவானது. 19ஆம் நூற்றாண்டில், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில், ஸ்பீட் ஸ்கேட்டிங் கிளப்புகள் தொடங்கப்பட்டன.

1893ஆம் ஆண்டு, ஸ்பீட் ஸ்கேட்டிங் சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டிகள், நெதர்லாந்தில் ஆரம்பமாயின. 1924ஆம் ஆண்டு, பிரான்சில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் பந்தயங்களில், இந்த விளையாட்டு அறிமுகமானது.

தற்போது, உலகெங்கிலும் பிரபலமாகி வருகிறது. உலகளாவிய அளவில், சாம்பியன்ஷிப் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன. உலகக் கோப்பைப் போட்டிகளும் நடக்கின்றன. இன்டர்நேஷனல் ஸ்கேட்டிங் யூனியன் (ISU) என்ற அமைப்பு இவற்றுக்கான விதிமுறைகளை வகுக்கிறது.

இந்தியாவிலும், ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டி பிரபலமாகி வருகிறது. சமீபத்தில் டேராடூனில், 'ஏசியன் ஓபன் ஷார்ட் டிராக் ஸ்பீட் ஸ்கேட்டிங் டிராபி சாம்பியன்ஷிப்' (Asian Open Short Track Speed Skating Trophy championship) போட்டிகள் நடந்தன. இதில், இந்தியா உட்பட, 11 ஆசிய நாடுகள் பங்கேற்றன.

**–ஜி.வி.ரிதன்யா**

## பிரபலமான வீரர்கள்!




கனடாவைச் சேர்ந்த, **ஜோர்டான் பியர்ரிகில்லெஸ்** [Jordan PierreGilles], ஸ்ட்டிவன் டுபோய்ஸ் [Steven Dubois]; கொரியாவைச் சேர்ந்த, பார்க் ஜிவொன் [Park Ji won] போன்றவர்கள், ஆண் ஸ்பீட் ஸ்கேட்டிங் வீரர்களில் பிரபலமானவர்கள்.

பெண்களில், அமெரிக்காவின் கிறிஸ்டியன் சான்டோஸ்–கிரிஸ்வோல்ட் [Kristen Santos Griswold], கொரின்னி ஸ்டோட்டர்ட் [Corinne Stoddard]; நெதர்லாந்தின் ஸாண்ட்ரா வெல்ஸெபோர் [Xandra Velzeboer] ஆகியோர், இந்தப் போட்டிகளில் வல்லவர்கள்.

விக்ரம் இங்காலே, சித்தான்ட் காம்ப்ளே, ஆனந்த்குமார் வேல்குமார், **ஷுருதி கோட்வால்**, ஆரதி கஸ்தூரி ராஜ், சாய் சமிதாஸ் அகுலா போன்றோர், இந்திய ஸ்பீட் ஸ்கேட்டிங் வீரர்களில் நம்பிக்கை நட்சத்திரங்கள்.



உடற்பயிற்சி

# ஜம்ப் ஸ்குவாட்ஸ்

ஜம்ப் ஸ்குவாட்ஸ் (Jump Squats) என்பது, ஒரு தீவிரமான உடற்பயிற்சி. இது உடல் முழுவதற்கும், குறிப்பாகக் கால்கள், பிட்டம் மற்றும் இதயத் தசை மண்டலத்திற்கும் நல்ல பலனைத் தருகிறது.

இந்த உடற்பயிற்சி, அதிகக் கலோரிகளை எரிப்பதுடன், உங்கள் கால்களின் வேகத் திறனை அதிகரிக்க உதவுகிறது.

### செய்வது எப்படி?

**ஆரம்ப நிலை:**



- கால்களைத் தோள்பட்டை அகலத்திற்கு விரித்து நில்லுங்கள்.
- கைகளை மார்புக்கு முன்னால் கோர்த்துக் கொள்ளலாம் அல்லது உடலின் பக்கவாட்டில் வைத்துக்கொள்ளலாம்.

### பயிற்சி நிலைகள்:

**குறைந்த நிலை** (Squat Down):



- இடுப்புப் பகுதியைப் பின்னோக்கித் தள்ளி, ஒரு நாற்காலியில் அமர்வது போலக் கீழே செல்லுங்கள்.
- உங்கள் தொடைகள் தரையுடன் இணையாக இருக்கும் வரை செல்லலாம்.
- மார்பு நிமிர்ந்து இருக்க வேண்டும்.
- முழங்கால்கள், கால்விரல்களைத் தாண்டிச் செல்லக் கூடாது.

**மேலே குதித்தல்** (Jump Up):



- மேற்படி சொன்ன நிலையில் இருந்து, கால்களில் உள்ள அனைத்து சக்தியையும் பயன்படுத்தி, மேல்நோக்கி வேகமாகக் குதிக்கவும்.
- குதிக்கும்போது கைகளைப் பின்னோக்கி வீசலாம். இது, உடலை மேலும் உயர்த்த உதவும்.

**தரையில் இறங்குதல்** (Landing):

- தரையில் இறங்கும்போது, முழங்கால்களைச் சற்று வளைத்து மெதுவாக இறங்கவும்.
- முழுமையாக நேராக நிற்பதைத் தவிர்த்து, உடனடியாக அடுத்த ஸ்குவாட் நிலைக்குச் செல்லவும். இது, முழங்கால்கள், கணுக்கால்களில் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கும்.

### கவனிக்க வேண்டியவை

- இந்தப் பயிற்சியைத் தொடங்குவதற்கு முன், தசைகளைத் தயார்ப்படுத்த, 'வார்ம்அப்' செய்வது அவசியம்.
- ஆரம்பத்தில் சில செட்கள் மட்டும் செய்து, படிப்படியாக எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.
- காயம் ஏற்படாமல் இருக்க, பயிற்சியைச் சரியான முறையில் செய்வது மிகவும் முக்கியம்.
- எந்த ஒரு பயிற்சியைச் செய்வதற்கு முன்பும், ஒரு மருத்துவரை அல்லது உடற்பயிற்சி நிபுணரை அணுகுவது நல்லது.

# சோப்பில் இவ்வளவு விஷயங்களா!

ஒரு சாதாரண அனுபவம் கூட, நமக்குள் ஓர் ஆழமான சிந்தனையை விதைத்துவிடும். அப்படிப்பட்ட ஒரு சம்பவம் தான் இந்தக் கவிதை. இந்தக் கவிதையின் தலைப்பு சோப்.

Soap

Some people are not having manners,
this I am always observing,
For example other day I find
I am needing soap
For ordinary washing myself purposes.
So I'm going to one small shop
nearby in my lane and I'm asking
for well-known brand soap.
That shopman he's giving me soap
but I'm finding it defective version.
So I'm saying very politely — -
though in Hindi I'm saying it,
and my Hindi is not so good as my English,
Please to excuse me
but this is defective version of well-known brand soap.
That shopman is saying
and very rudely he is saying it,
What is wrong with soap?
Still I am keeping my temper
and repeating very smilingly
Please to note this defect in soap,
and still he is denying the truth.
So I'm getting very angry that time
and with loud voice I am saying
YOU ARE BLIND OR WHAT?
Now he is shouting
YOU ARE CALLING ME BLIND OR WHAT?
Come outside and I will show you
Then I am shouting
What you will show me
Which I haven't got already?
It is vulgar thing to say
but I am saying it.
Now small crowd is collecting
and shopman is much bigger than me,
and I am not caring so much
for small defect in well-known brand soap.
So I'm saying
Alright OK Alright OK
this time I will take
but not next time.

அருகிலுள்ள ஒரு கடைக்குச் சென்று, பிரபலமான நிறுவன சோப்பைக் கேட்கிறார். கடைக்காரர் அந்தச் சோப்பைக் கொடுக்கிறார். ஆனால் அதில் ஏதோ சரியில்லை நம் கதாநாயகன் உணர்கிறார்.

அவர் மென்மையாகக் கடைக்காரரிடம் இது சரியில்லை என்கிறார். ஆனால் கடைக்காரர் கோபமாக, "இதில் என்ன இருக்கிறது?" என்று பதிலளிக்கிறார்.

ஒரே விஷயத்தை நம் கதாநாயகன் சிரிப்புடன் மீண்டும் சொல்கிறார். ஆனால் கடைக்காரர் மீண்டும் மறுக்கிறார்.



இதனால் நம் கதாநாயகனும் சற்று கோபமாக, "உங்களுக்கு என்ன கண் தெரியாதா?" எனக் கேட்கிறார். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் பெரிதாகி விடுகிறது. மக்கள் கூடி விடுகிறார்கள். கடைக்காரர் உயரமானவர், கதாநாயகன் அப்படி இல்லை. ஆகவே, கதாநாயகன் சமாதானமாக "சரி சரி, இப்போதைக்கு வாங்கிக்கிறேன்" எனக் கூறி விடுகிறார்.

இது ஓர் அற்பமான சம்பவம் போலத் தோன்றலாம். ஆனால், கவிதையின் வழியாக எழுத்தாளர் நம்மைச் சிந்திக்க வைக்கிறார். நமது வாழ்வில் நாள்தோறும் ஏற்படும் சிறிய முறைகேடுகள் எப்படித் தொடங்குகின்றன, எங்கு கட்டுப்பாடு தேவைப்படுகிறது என்பதைக் காட்டிச் செல்கிறார்.

ஒவ்வொரு உரையாடலும் ஒரு விளைவைக் கொண்டது. அப்படியென்றால், அந்த உரையாடலை அறிவாகவோ, பாதுகாப்பாகவோ, சண்டையாகவோ, சமாதானமாகவோ எடுத்துச் செல்லும் பொறுப்பும் நம்மிடம் தானே!

இங்கு உள்ள படத்தைப் பார்த்து, இந்த ஆங்கில கவிதையின் எழுத்தாளரைக் கண்டுபிடியுங்கள்.

– லோகேஷ் மீரா

## இரண்டும் ஒன்றல்ல

### Every day vs Everyday

இந்த இரண்டு சொற்களும் ஒரே மாதிரி தோன்றும். ஆனால் அர்த்தமும், பயன்பாடும் வெகுவாக மாறும்.

இதைப் பிழையின்றி எழுதுவது அவசியம்.

**Every day (இரண்டு வார்த்தை)**

நாம் ஒவ்வொரு நாளும் செய்யும் செயல்களைக் குறிக்கும்.

இது ஒரு 'அட்வெர்ப்' (adverb) — காலத்தைக் குறிப்பது.

**உதாரணம்:**

நான்
ஒவ்வொரு
நாளும்
காலை
நடைப்பயிற்சி
செல்கிறேன்




*# He takes the bus to school every day.*

அவன் ஒவ்வொரு நாளும் பேருந்தில் பள்ளிக்குச் செல்கிறான்.

**Everyday (ஒரே வார்த்தை)**

தினசரி / சாதாரணமான என்பதைக் குறிக்கும்.

இது ஒரு 'அட்ஜெக்டிவ்' — ஒரு பெயரை வர்ணிக்கிறது.

உதாரணம்:

*# This is my everyday jacket.*

இது நான் தினசரி அணியும் ஜாக்கெட்.

*# Everyday problems can teach you deep life lessons.*

தினசரி ஏற்படும் பிரச்னைகள் வாழ்க்கை பாடங்களைக் கற்பிக்கின்றன.

இரண்டும், பார்ப்பதற்குச் சரியாக இருந்தாலும், இடம் தவறி வந்தால் பொருள் மாறிவிடும். அதனால், எழுதும் பொழுது கவனமாக இருங்கள்!

– எல்.எம்.

## புதிய சொற்கள்




ஒவ்வொரு ஆங்கில அகராதியிலும், பிரபலமாகிவரும், புழக்கத்தில் அதிகம் இருக்கும் ஆங்கிலச் சொற்கள், இடம்பிடித்துவிடும். அந்த வகையில் இந்த ஆண்டு, கேம்பிரிட்ஜ் ஆங்கில அகராதியில் சேர்க்கப்பட்டுள்ள மூன்று முக்கியமான ஆங்கிலச் சொற்கள் இவை:

**1.Skibidi (ஸ்கிபிடி) –** பழைய தலைமுறையினரும் 'டிக்டாக்'கில் இல்லாதவர்களும் 'ஸ்கிபிடி' போன்ற வார்த்தைகளுக்குப் பழகிக்கொள்ள வேண்டும். இளையோர் தம் பேச்சின் நடுவே இதைப் பயன்படுத்துகிறார்கள். 'ஸ்கிபிடி டாய்லெட்' – மனித தலைகள் கழிப்பறைகளிலிருந்து எட்டிப் பார்க்கும் யூடியூப் வீடியோவால் இந்தச் சொல் பிரபலமடைந்தது.

கேம்பிரிட்ஜ் அகராதி ஸ்கிபிடிக்கு, 'கூல் அல்லது 'கெட்டது' என்பன போன்ற வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்ட ஒரு சொல். அல்லது உண்மையான அர்த்தம் ஏதுமில்லாமல் நகைச்சுவையாகப் பயன்படுத்தப்படலாம்' என்று வரையறுக்கிறது. அதன் பயன்பாட்டிற்கான ஒரு எடுத்துக்காட்டு: *'What the skibidi are you doing?'*

**2. Tradwife (ட்ரேட்வைஃப்) –** 'பாரம்பரிய மனைவி' (**Traditional wife**) என்பதன் சுருக்கமே ட்ரேட்வைஃப். இந்த வார்த்தை பாரம்பரிய பாலின பாத்திரங்களை வகிக்கும் ஒரு பெண்ணைக் குறிக்கிறது. குறிப்பாக வீட்டில் இருந்து சமைக்கவும் சுத்தம் செய்யவும், கணவருக்கு ஆதரவாக இருப்போரைக் குறிக்கிறது. மேலோட்டமாகப் பார்த்தால், இது சாதாரணமான சொல்லாகத் தோன்றலாம். ஆனால், இந்தச் சொல்லைக் கொண்டு இணையத்தில் பெண்கள் கடுமையாக விமர்சிக்கப்படுவர்.

**3. Delulu (டெலுலு) – டெலூஷனல் (Delusional)** என்பதன் சுருக்கமே டெலுலு. தனிப்பட்ட நம்பிக்கைகள் யதார்த்தத்தை விட முக்கியமானவை என்பதைச் சொல்வதற்கு இந்தச் சொல் பயன்படுகிறது. அதன் அகராதி **பொருள்:** நீங்கள் நம்ப விரும்புவதால், உண்மை அல்லாத அல்லது யதார்த்தமற்ற விஷயங்களை நம்புவது.

விடை

சோப்பில் இவ்வளவு விஷயங்களா!
அந்தக் கவிஞர்: நஸ்ஸிம் எசக்கியேல்

**செய்தி:** மியான்மரில் ஒரு புவிசார் அரசியல் சிக்கல்

# வடகிழக்கின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை



இந்தியாவின் வடகிழக்கு பகுதி மற்றும் அதை ஒட்டியுள்ள நாடான, மியான்மரிலும், ஒரு புவிசார் அரசியல் சிக்கல் தொடர்கிறது. மியான்மர் ஒருங்கிணைந்த நாடாக இல்லை. அங்கு ஆளும் ராணுவ அரசுக்கும், மக்கள் பாதுகாப்புப் படைகளுக்கும், ஆயுதமேந்திய பல்வேறு இனக் குழுக்களுக்கும் இடையிலான மோதலாக மாறியிருக்கிறது.

அந்தப் பகுதியில் நிகழும் மோதல்களால், மனிதாபிமான நெருக்கடி உச்சத்தை அடைந்துள்ளது. கிட்டத்தட்ட 35 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர், ஏறத்தாழ 2 கோடி பேருக்கு அடிப்படை உதவிகள் தேவை. மேலும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் முடங்கியுள்ளன. இந்த நிலையில், ராகைன் என்ற வட்டாரத்தில் உள்ள எல்லைப் பகுதிகளை அரகான் ராணுவக் குழு கைப்பற்றியுள்ளது.

ஆயுதக் குழுவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், 'கலாதன்' பல்நோக்கு போக்குவரத்து திட்டமும், முத்தரப்பு நெடுஞ்சாலைத் திட்டமும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் கனவுத் திட்டங்களான இவற்றை, மோதல்களுக்கு நடுவே நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்தவேண்டும் என்ற மத்திய அரசின் லட்சியத்திற்கு தடங்கல் எழுந்துள்ளது.

இந்திய அரசு, தனது பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்காக, மியான்மரின் ராணுவ அரசுடன் மட்டுமல்ல, அங்கே இயங்கிவரும் ஆயுதக் குழுக்களுடனும் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. மியான்மரின் உள்நாட்டுப் போரால், வடகிழக்கை வளர்த்தெடுக்கும் நோக்கத்திற்கும், அண்டை நாட்டு நிலவரம் குறித்து, உறுதியான நிலையை எடுப்பதற்கும் நடுவே நிற்கிறது இந்தியா. இப்படியான இக்கட்டில், இந்தியா நடுநிலை வகிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

**செய்தி:** வாக்காளர் விவரத் திருத்தத்துக்கு வரவேற்பும், சந்தேகமும்

# சிறப்புத் தீவிர திருத்தம் தேவையா?



இந்திய ஜனநாயகத்தின் நம்பகத்தன்மை, அதன் வாக்காளர் பட்டியலைச் சார்ந்துள்ளது. யார் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள், அந்தப் பட்டியல் எவ்வளவு நம்பகமானது என்பதைப் பொறுத்தே அதன் வலிமை அமையும். இந்த நம்பிக்கையை வலுப்படுத்த, தேர்தல் ஆணையம் ஒரு புதிய நடைமுறையைக் கொண்டு வந்துள்ளது. அதுதான் சிறப்பு தீவிர திருத்தம் (SIR). இது, வழக்கமான திருத்தங்களைவிட, தீவிரமானது. அதாவது, வாக்காளர்கள் தங்கள் தகுதியை, ஆவணங்களின் மூலம், மீண்டும் நிரூபிக்க வேண்டிய ஒரு கடும் செயல்முறையாகும்.

பீகார் மாநிலத்தில், இந்த ஆண்டு சோதனை அடிப்படையில், அமல்படுத்தப்பட்ட இந்த முறை, இப்போது நாடு முழுவதும் செயல்படுத்தலாம் என்ற யோசனை, விவாதத்தைக் கிளப்பியுள்ளது. அண்மையில், 'வோட் வைப்' நிறுவனம், மக்களிடம் நடத்திய கருத்தாய்வின்படி, கிட்டத்தட்ட பாதி இந்தியர்கள் (49.2 சதவீதம்), உடனடியாக இந்த முறையை நாடு முழுவதும் அமல்படுத்த ஆதரவு தெரிவித்துள்ளனர். இது, போலிப் பெயர்களை நீக்கி, தேர்தல் முறைகேடுகளைக் குறைக்கும் என அவர்கள் நம்புகின்றனர். ஆனால், 39.1 சதவீதத்தினர், வழக்கமாகச் செய்யப்படும் திருத்தமே போதும் என்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் மீது நம்பிக்கை என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக உள்ளது. இந்த முறை சரியாகவே நடத்தப்படுவதாக 39.9 சதவீதத்தினர் நம்ப, ஏறக்குறைய அதே அளவு மக்கள் (39.8 சதவீதத்தினர்) இந்தப் புதிய முறையைச் சந்தேகிக்கிறார்கள். குறிப்பாக இளம் வாக்காளர்களிடையே, இந்தச் சந்தேகம் அதிகமாக உள்ளது. அதாவது, 18 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே இந்தச் செயல்முறையை நம்புகிறார்கள்.

இந்தியாவுக்கு, 'தூய்மையான' வாக்காளர் பட்டியல் தேவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அந்தப் பட்டியலை உருவாக்கும் முறை, மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என்றால், அது ஒரு சீர்திருத்தமாக இல்லாமல், மற்றும் ஒரு, குளறுபடியான பரிசோதனையாகவே பார்க்கப்படும்.

**செய்தி:** 130வது திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது

# சிறைக்குப் போனால், நாற்காலி காலி!

நாடாளுமன்றத்தில், திருப்புமுனையாக, அரசியலமைப்புச் சட்டத்தின், 130வது திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. நாட்டின் உயர் பதவிகளான, பிரதமர், மாநில முதல்வர் அல்லது அமைச்சர் பதவி வகிப்போருக்கான மசோதா அது.

அதன்படி, ஆளும் பொறுப்பில் உள்ளவர், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தண்டனை கிடைக்கக்கூடிய குற்றச்சாட்டின் கீழ், 30 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டால், அவரது பதவி பறிபோகும். அதாவது, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்படாவிட்டாலும், தானாகவே அவரது பதவி பறிபோகும்.

இந்த மசோதா அரசியலமைப்பின் சில முக்கிய பிரிவுகளில் திருத்தங்களைக் கொண்டுவருகிறது. அதன்படி, ஓர் அமைச்சர் முப்பது நாட்களுக்கு மேல் சிறையில் இருக்கும்போது, அவரை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்க, குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ, நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், 31வது நாள், அவரது பதவி தானாகவே முடிவுக்கு வரும். இருப்பினும், விடுதலையான பிறகு அவர் மீண்டும் பதவியேற்க முடியும்.

அதிகாரத்தில் இருப்பவர்கள், சிறையில் இருந்துகொண்டே ஆட்சி செய்வதைத் தடுக்கவே, இந்த நடவடிக்கை, என அரசு தரப்பில் கூறப்படுகிறது. ஆனால், நீதியின் அடிப்படை அம்சமான, 'ஒருவர், குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்படும் வரை, குற்றவாளி அல்ல' என்ற கருத்துக்கு எதிரானது என்கிறார்கள் விமர்சகர்கள். மேலும், இது கூட்டாட்சி தத்துவத்தையும், அதிகாரப் பிரிவினையையும் பலவீனப்படுத்துவதாக அவர்கள் வாதிடுகின்றனர்.

இந்தச் சட்டம் நிறைவேறினால், அது ஓர் அடிப்படை கேள்வியை எழுப்பும். நமது ஜனநாயகம், முன்னுரிமை தருவது, நீதிக்கா, இல்லை நன்னெறிக்கா? வெறும் சந்தேகத்தின் பேரில், முப்பது நாட்கள் சிறைவாசம் போக நேரும், ஓர் அமைச்சரின் பதவி பறிக்கப்படுவது, நிர்வாகத்தை நெறிப்படுத்தலாம். ஆனால், சட்டத்தின் ஆட்சிக்கான நம்பிக்கையை அது பலவீனப்படுத்தும் அபாயமும் உள்ளது, எனச் சட்ட வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

# மேதைகள் பிறக்கவில்லை, உருவாக்கப்படுகிறார்கள்!



"சதுரங்க விளையாட்டு பெண்களுக்குச் சரிவராது. அது ஒரு சண்டை விளையாட்டு. சண்டையில் பெண்கள் பலவீனமானவர்கள்." இதை சொன்னவர் பிரபல ரஷ்ய கிராண்ட்மாஸ்டர் கேரி காஸ்பரோவ். 1989இல் ஓர் அமெரிக்கப் பத்திரிகையில் இதைச் சொல்லியிருந்தார். அப்போது தெரிவித்தது இப்போது இணையத்தில் பேசு பொருளாகியுள்ளது.

தற்போது அந்தக் கூற்றைப் பொய்யாக்கியுள்ளார் இந்தியச் சதுரங்க ராணி திவ்யா தேஷ்முக். சமீபத்தில் இவர் மகளிர் உலக சதுரங்க சாம்பியன் பட்டம் வென்றது நம் எல்லோருக்கும் தெரியும்! 'திவ்யாவின் துணிச்சலான சதுரங்க நகர்வுகள் போல்கர் சகோதரிகளின் நகர்வுகளைப் பிரதிபலிக்கின்றன' என்று இந்தியச் சதுரங்கப் பயிற்சியாளர் சியாம் சுந்தர் தெரிவித்திருந்தார்.

யார் அந்த போல்கர் சகோதரிகள்? பார்ப்போம்!

## போல்கர் சகோதரிகள்



ஹங்கேரி நாட்டைச் சார்ந்தவர்கள் போல்கர் சகோதரிகள் (Polgar Sisters). உலகின் மிக அற்புதமாகச் சதுரங்கம் விளையாடும் உடன்பிறப்புகள்.

இவர்களின் தந்தை லாஸ்லோ போல்கர் (Laszlo Polgar).

இவர் சிறு வயதிலிருந்தே தனது மூன்று குழந்தைகளுக்கும் சதுரங்கம் விளையாடப் பயிற்சி அளித்தார்.

'மேதைகள் பிறக்கவில்லை, உருவாக்கப்படுகிறார்கள்' என்று நம்பினார்.

மூன்று பேரும் வீட்டிலேயே கல்வி பயின்றனர். சதுரங்க விளையாட்டில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். அந்தக் காலத்தில் இப்படிச் செய்வது சரியான தேர்வாக இல்லாதபோதும், தன்னம்பிக்கையுடன் அந்த முடிவை எடுத்திருந்தார் தந்தை லாஸ்லோ போல்கர்.

இவர், தனது மகள்கள், ஆண்களுக்கு எதிராகப் போட்டியிட வேண்டும் என்றும் நினைத்தார். ஆனால், அந்த நேரத்தில், பெண்கள் கலந்துகொள்ளும் போட்டிகளில் மட்டுமே பெண்கள் விளையாட அனுமதிக்கப்பட்டனர். ஹங்கேரிய சதுரங்கக் கூட்டமைப்பின் கொள்கையாகவும் இருந்தது!

## சோபியா போல்கர்



**பிறப்பு:**
2.11.1974

**பிறந்த இடம்:**
புடாபெஸ்ட்

**பட்டம்:**
சர்வதேச மாஸ்டர் மற்றும் பெண் கிராண்ட்மாஸ்டர்

### சாதனைகள்

- 14 வயதில், ரோமில் (Rome) நடந்த ஒரு போட்டியில் தனது செயல்திறனுக்காகத் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தார், அங்கு இவர் பல கிராண்ட்மாஸ்டர்களை 9இல் 8.5 மதிப்பெண்களுடன் வீழ்த்தி வென்றார். போட்டிக்கான இவரது செயல்திறன் மதிப்பீடு 2879 ஆனது. இது சதுரங்க வரலாற்றில் வலுவான செயல்திறன் மதிப்பீடுகளில் ஒன்று.
- உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 10 முறை கலந்துகொண்ட கிராண்ட்மாஸ்டர் விக்டர் கோர்ச்னோயை வீழ்த்தினார்.
- சதுரங்க ஒலிம்பிக்கில் மூன்று முறை விளையாடியவர். இவரும் இவரது குழுவினரும் 1998 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் தங்கப் பதக்கத்தையும், 1994இல் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.
- தற்போது இவர் இஸ்ரேலில் வசிக்கிறார்.

## சூசன் போல்கர்



**பிறப்பு:**
19.4.1969

**பிறந்த இடம்:**
புடாபெஸ்ட்

**பட்டம்:**
ஹங்கேரிய மற்றும் அமெரிக்க கிராண்ட்மாஸ்டர்

### சாதனைகள்

- 15 வயதில் பெண் வீராங்கனைகளின் உலகத் தரவரிசையில் முதல் இடம் பிடித்தார்.
- அடுத்த 23 ஆண்டுகளுக்கு இவர் முதல் மூன்று இடங்களில் நீடித்தார்.
- 1986இல் நடைபெற்ற ஆண்கள் உலக சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில், தகுதி பெற்ற வரலாற்றில் முதல் பெண்மணி இவர்தான்.
- 1996 முதல் 1999 வரை கிளாசிக்கல் சதுரங்க நேரக் கட்டுப்பாடு விளையாட்டில், பெண்கள் உலக சதுரங்க சாம்பியனாகத் திகழ்ந்தார்.
- 1992இல் உலக பிளிட்ஸ் மற்றும் ரேபிட் சாம்பியன்ஷிப்பை வென்றார்.
- அக்டோபர் 2005இல், 2577 என்ற மதிப்பீட்டை எட்டினார். அதன்மூலம், பெண்கள் சதுரங்க தரவரிசையில் 2ஆம் இடம் பிடித்தார்.
- சதுரங்க ஆசிரியர், எழுத்தாளர், எனப் பன்முகம் கொண்டவர்.

## ஜூடிட் போல்கர்



**பிறப்பு:**
23.07.1976

**பிறந்த இடம்:**
புடாபெஸ்ட்

**பட்டம்:**
கிராண்ட்மாஸ்டர்

### சாதனைகள்

- 2700+ மதிப்பீட்டைப் பெற்ற முதல் பெண்.
- 2005ஆம் ஆண்டில் உலக சதுரங்கத் தரவரிசை பட்டியலில் 8வது இடத்தைப் பிடித்திருந்தார்.
- 15 வயது, 4 மாதங்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தைப் பெற்றார்.
- மேக்னஸ் கார்ல்சன், அனடோலி கார்போவ், போரிஸ் ஸ்பாஸ்கி, வாசிலி ஸ்மிஸ்லோவ், விஸ்வநாதன் ஆனந்த், ருஸ்தம் காசிம்ட்ஜானோவ் உள்ளிட்ட உலக சாம்பியன்களை இவர் தோற்கடித்துள்ளார்.
- **2002ஆம் ஆண்டு இவர் கேரி காஸ்பரோவையும் தோற்கடித்துள்ளார்.**
- செப்டம்பர் 2015இல் சதுரங்கப் போட்டி விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.